நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கம்பிளியான்பட்டி ஊராட்சி, அம்மாபட்டியை சேர்ந்தவர்கள், திருச்சி மாவட்டம், வளநாடு கைகாட்டி கோயிலுக்குச் சாமி கும்பிடச் சென்றனர். கோயிலுக்குச் சென்றவர்களின் வாகனத்தின்மீது பேருந்து மோதி, 10 பேர் இறந்துவிட்டனர். நான் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார்கள். எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் அம்மாபட்டிக்கு நேரில் சென்று இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள். இறந்த 10 பேரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மிகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வந்த காரணத்தினால், இறந்த ஒவ்வொரு நபரின் குடும்பத்தினருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.5 இலட்சம் நிவாரணம் வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அரசிடமிருந்து பதில் வந்தவுடன் தெரிவிக்கப்படும். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து வங்கியினுடைய பணம் எடுத்து வரும்பொழுது கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்; அது என்னுடைய ஆய்வில் உள்ளது. உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

வேலூர் மாவட்டம், சோளிங்கர் மற்றும் பேலூரில் துணை மின் நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என்.ஜி. பார்த்திபன் மற்றும் திரு. அ. நல்லதம்பி ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

2016 ஆகஸ்ட் 16] [பேரவைத் தலைவர்]

அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

***திரு. என்.ஜி. பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் சக்தியால் மின்சக்தியை சரிசெய்த தனிப் பெரும் தெய்வம், எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை, அகிலத்தில் சொல்லப்பட்ட வேதங்கள் நான்கு; இன்று, அகிலமே உச்சரிக்கும் ஐந்தாவது வேதம், 'அம்மா' எனும் அன்பு வேதம். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் ஆட்சியில் இல்லத்திலும் ஒளி; மக்கள் உள்ளத்திலும் ஒளி! நரகாசுரர்களின் இருட்டை விரட்டிய நவீன பராசக்தி எங்கள் அம்மா! இன்று தமிழகம் மின்மிகை மாநிலமாக மாறியுள்ளதற்குக் காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆளுமைத் திறனே! மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்ற விவர அறிக்கையில், சோளிங்கர் பகுதிக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ளவாறு கவன ஈர்ப்பினை அப்படியே படியுங்கள்.

திரு. என்.ஜி. பார்த்திபன்: வேலூர் மாவட்டம், சோளிங்கருக்கு அருகிலுள்ள திருவலத்தில் இந்திய மின் தொடரமைப்புக் கழகத்திற்குச் சொந்தமான 765 கிலோ வாட் துணை மின் நிலையமும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 'கவனத்தை ஈர்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. என்.ஜி. பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சோளிங்கர் மற்றும் பேலூரில் புதிதாக துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:*

அறிக்கை

வேலூர் மாவட்டம், சோளிங்கருக்கு அருகிலுள்ள திருவலத்தில் இந்திய மின் தொடரமைப்புக் கழகத்திற்கு (POWER GRID) சொந்தமான 765 கி.வோ. துணை மின் நிலையமும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்திற்கு (TANTRANSCO) சொந்தமான 400 கி.வோ. துணை மின் நிலையமும் உள்ளன. மேலும், சோளிங்கருக்கு அருகில் மோசூர் 230/110 கி.வோ. துணை மின் நிலையம் உள்ளது. இத்துணை மின் நிலையங்கள்மூலம் சோளிங்கர் பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சோளிங்கர் பகுதியில் தற்பொழுது உள்ள மின் பளுவிற்கு அப்பகுதியில் உள்ள துணை மின் நிலையங்களே போதுமானதாக உள்ளன. எனவே, உடன் ஒரு 400 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கத் தேவை எழவில்லை. இருப்பினும், சோளிங்கரில் எதிர்வரும் காலத்தில் ஏற்படும் மின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, சோளிங்கரில் ஒரு 400 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க மத்திய மின்சார ஆணையத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் காலத்தில் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூருக்கு அருகில் உள்ள புதூர்நாடு மலைப்பகுதியிலுள்ள பேலூர் கிராமத்திற்கு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு 49 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பத்தூர் 110 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தில் அமைந்துள்ள மின்மாற்றியின் திறன் 1X16 எம்.வி.ஏ. ஆகும். அதன் உச்ச மின்பளு 13.24 எம்.வி.ஏ. ஆகும். இப்பகுதியில் பெருகிவரும் மின்பளு தேவையைக் கருத்தில்கொண்டு, புதூர்நாடு பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க, தீனதயாள் உபாத்யாய கிராம ஜோதி யோஜன நிதித் திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்க, பேலூர் கிராமத்தில்

சர்வே எண் 10/1 C2-ல் 1.0 ஏக்கர் பரப்பளவு உள்ள பட்டா நிலம் கண்டறியப்பட்டு, கையகப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. என்.ஜி. பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப்பெரிய தொழில் நிறுவனமான டி.வி.எஸ். நிறுவனமும், அதனைச் சார்ந்த துணை நிறுவனங்களும் சோளிங்கர் பகுதியிலே பெருவாரியான தொழில் உற்பத்தியிலே ஈடுபட்டு வருகின்றன. அந்தப் பகுதியிலே, மின் தொடரமைப்பில் ஏற்பட்டுள்ள சிரமம் என்னவென்று சொன்னால், மோரூர் துணை மின் நிலையத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவிலே இருந்தும், 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவலத்திலிருந்து மின்சாரம் வருவதால், மின்சாரம் எடுத்துச் செல்லும் கொள்ளளவு குறைவாக இருப்பதாலும், மோரூர் மற்றும் திருவலம் துணை மின் நிலையங்களில் மின்சாரத்தின் கொள்ளளவு குறைவாக இருப்பதாலும், கூடுதல் மின் பளு தேவைப்படுகிறது. இதனால் சோளிங்கர் பகுதியிலே, 400 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வரவேண்டும். அதற்கான இடமும் தற்போது ஆய்விலே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோளிங்கர் பகுதியிலே 400 கி.வோ. துணை மின் நிலையத்தை நிச்சயமாக அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர்*

அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில், ஜவ்வாது மலைப் பகுதியில், புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு என மூன்று கிராம ஊராட்சிகள் உள்ளன. இந்தப் பகுதியிலே சுமார் 25,000 மக்கள் வசித்து வருகிறார்கள். இங்கு 10-க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளும், உண்டு உறைவிடப் பள்ளிகளும், ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன. இங்குள்ள மலைவாழ் மக்கள் அதிகமாக விவசாயத் தொழிலையே நம்பி, விவசாயம் செய்கின்ற நிலை உள்ளது. விவசாயம் செய்வதற்கு நிறைய தண்ணீர் உள்ளது. ஆனால், போதுமான மின்சாரம் கிடைப்பதில்லை. அதனால் விவசாயப் பயிர்கள் ஆரம்ப கட்டத்தில் செழிப்பாக வளர்ந்து, பின்னர் பருவ காலத்தில் சரியான மின்சாரம் கிடைக்காத காரணத்தினால், நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு முடிவதில்லை. அதனால் விவசாயத்திலிருந்து கிடைக்கவேண்டிய முழுப் பயன்களும் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. விவசாயத்தில் பெரும் நஷ்டம் வருவதால், அங்குள்ள மலைவாழ் மக்கள் அருகிலுள்ள பெங்களூர் போன்ற பகுதிகளுக்கு கூலித் தொழிலாளர்களாகச் செல்கின்ற நிலை உள்ளது. எனவே, அந்த மலைவாழ் மக்களுக்குச் சீரான மின்சாரத்தை ஏற்படுத்திக் கொடுத்து, அந்தப் பகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட வேண்டும். ஏற்கெனவே, தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் நிலை உள்ளதால், இந்த துணை மின் நிலையத்தை விரைந்து முடித்துக் கொடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஏற்கெனவே இந்திய மின்தொடரமைப்புக் கழகத்திற்குச் சொந்தமான 765 கி.வோ. துணை மின் நிலையம் திருவலத்திலும், மாநில அரசுக்குச் சொந்தமாக 400 கி.வோ. துணை

2016 ஆகஸ்ட் 16] [திரு. பி. தங்கமணி]
மின் நிலையமும் இருக்கின்றன. இப்போது அந்தப் பகுதியில் அந்த அளவிற்கு மின் அழுத்தம் இல்லை. இருந்தாலும், எதிர்வரும் காலத்தைக் கணக்கிலேகொண்டு, மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கின்றது.

400 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமானால், கிட்டத்தட்ட 40 ஏக்கர் நிலம் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் துணை மின் நிலையம் வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டு வருகின்றனர். துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்வதிலேதான் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் தேர்வு செய்வதற்கு உதவுவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் பேசியதில் ஒரு திருத்தத்தைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் கூறியதைப்போல, அந்த மலைக் கிராமத்தில் விவசாயம் செய்யும்போது ஆரம்ப காலத்தில் சரியாக மின்சாரம் கிடைக்கிறது, அதனால் விவசாயம் செய்கிறார்கள் என்றும், பருவ காலத்தில் மின்சாரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் விவசாயம் சரியாக செய்யமுடிவதில்லை என்றும் சொல்லியிருக்கின்றார்கள்; Power என்பது ஒரே மாதிரியாகத்தான் வரும். விவசாயத்திற்கு ஆரம்ப கட்டத்தில் பாதி power; பருவ காலத்தில் பாதி power என்று வராது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிக்கு மின்சாரம் 49 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருப்பத்தூரிலிருந்து வருகின்றது. 49 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து மின்சாரம் வருவதால், line loss அதிகம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கும் என்ற காரணத்தினால்தான், இப்போது புதிய இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த இடம் கையகப்படுத்தப்பட்டவுடன், உடனடியாக 33/11 KVA துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.